உளி- 1 | ஓசை-73 | மே-2023 | திங்களிதழ்

படைப்பு

# கல்வெட்டு

கவிதை மின்னிதழ்



www.padaippu.com

அரசு பதிவெண்: 521/2018

நிறுவனர் & ஆசிரியர் :
ஜின்னா அஸ்மி

நிர்வாகக் குழு :
சகா (சலீம் கான்)
இப்ராஹிம் ஷரீப்
ஜெ. ராஜா ஜெயகரன்

ஆசிரியர் குழு :
படைப்பு தேர்வுக்குழுமம்

இதழ் உருவாக்க உதவி :
ஷெண்பா
பிரபுசங்கர் க
தி.கலையரசி

வடிவமைப்பு :
முகம்மது புலவர் மீரான்

அட்டைப்படம் :
படைப்பு டிசைன் டீம்

இணையதள முகவரி :
www.padaippu.com

அலுவலக முகவரி :
படைப்பு குழுமம்
#8, மதுரை வீரன் நகர்
கூத்தப்பாக்கம்,
கடலூர் - 607002

படைப்பு பிரைவேட் லிமிட்டட்,
#12/6, மூன்றாம் தளம்,
வெல்வோர்த் ப்ராபர்ட்டீஸ்,
7 வது தெரு , டாக்டர் சுப்பாராயன் நகர்,
கோடம்பாக்கம், சென்னை - 600 024.
admin@padaippu.com
✆91 7338897788 / 7338847788

படைப்புகள் யாவும் முகநூல் படைப்புக்குழுவிலிருந்து தேர்வுசெய்யப்பட்டவை
இந்த மின்னிதழில் தங்களது படைப்புகள் வர வேண்டுமெனில் முகநூல் படைப்பு குழுவில் இணைந்து படைப்புகளை பதிய வேண்டுகிறோம். மின்னஞ்சலில் அனுப்பப்படும் கவிதைகளை பிரசுரிக்க இயலாது.

| | | | |
|---|---|---|---|
| பாண்டிச்செல்வி விஸ்வநாதன் | -4 | ச.ஆனந்தகுமார் | -23 |
| க.போ.சுருளியாண்டவர் | -5 | பூங்கோதை கனகராஜன் | -23 |
| லாஸ்யா | -6 | கலைச்செல்வி | -24 |
| அமுதா தமிழ்நாடன் | -7 | சுஜாதா கண்ணன் | -24 |
| ச.ப்ரியா | -8 | பிரியா பாஸ்கரன் | -25 |
| தமிழ்குமரன் | -9 | வணவை தூரிகா | -25 |
| மழைக்குருவி | -9 | கா. வெங்கடேஸ்வரன் | -26 |
| தமிழ்ச்செல்வன் | -9 | காசாவயல்கண்ணன் | -27 |
| மகிழினி காயத்ரி | -10 | ரா.ராஜசேகர் | -28 |
| சுயம்பு | -10 | சுரேஷ்பாபு ராசேந்திரன் | -29 |
| செ.வீரமணி | -11 | கோ.லீலா | -30 |
| ஜோதி சரண் | -12 | க. அய்யப்பன் | -30 |
| ஐ.தர்மசிங் | -12 | கோ. பாரதிமோகன் | -31 |
| ஆ.சார்லஸ் | -13 | மணிசங்கர் | -31 |
| துளசி வேந்தன் | -13 | த. ரவீந்திரன் | -32 |
| நா.கி.பிரசாத் | -14 | சிந்தா | -32 |
| சரண்யாசத்தியநாராயணன் | -14 | இரா. மதிராஜ் | -33 |
| கவி. விஜய் | -15 | நேசன் மகதி | -34 |
| மஹா பர்வீன் | -16 | மு.முபாரக் | -34 |
| கலிபூ | -17 | பிரபுசங்கர் க | -35 |
| மகேஷ் சிபி | -17 | கவிஜி | -36 |
| சந்துரு ஆர்சி | -18 | யாழினி | -37 |
| செ.புனிதஜோதி | -19 | குபோதினி | -37 |
| அன்பு மணிவேல் | -20 | சசிகலா திருமால் | -38 |
| கரு.கிருஷ்ணமூர்த்தி | -21 | சுப்பையா கந்தையா | -39 |
| செந்தில் | -21 | ஜனனி | -39 |
| மா. காளிதாஸ் | -22 | | |



கோடை விடுமுறைக்கு
குவியும்
மக்களோடு சேர்த்து
மலை வாசஸ்தலங்களையும்
மலர்க்கண்காட்சியையும்
தொலைக்காட்சி செய்திகளில்
பார்த்ததுண்டு

சொந்தத்தொழில்
எந்த ஞாயிறும் விடுமுறையில்லை

அடுத்தடுத்த இரு குழந்தைகளுக்குப்பின்
நான்கு வருடகாலம்
வானங்கூட பார்த்ததில்லை

பெரும்பாலும்
பிறந்தநாள் மறந்துவிடும்
இருபத்தைந்தாவது
திருமண நாளில் கூட
கேக் வெட்டி ஆச்சரிய பரிசளித்துக்கொண்டதில்லை

நல்ல நாளில்
கோவிலுக்கு சென்றதில்லை

கடற்கரை மணலும்
அலையும் காற்றும் கூட
அளவாடுகிறது கனவில்

மெலிதாய்
தலைகோதியதில்லை
வெயிலையோ மழையோ
இளையராஜா இசையோ
என்னோடு ரசித்ததில்லை
மோதிர விரல்
அணிந்திருக்கும்
மச்சத்திற்காவது
முத்தமிட்டமிருக்கலாம்

விரையமான காலத்தின்
எழுத மறந்த கணக்கை
வெள்ளையறிக்கை
விடுகிறது நரைரேகைகள்

நீண்ட கால
வேண்டுதலையும்
காதில் வாங்கிக் கொள்ளாத
கருவறை கடவுளாய் வீற்றிருக்கிறாய்
நீ வாசிக்காத என்
ஒவ்வொரு கவிதையிலும்
கருப்பொருளாய்

பாண்டிச்செல்வி விஸ்வநாதன்



மழையின்
வீரியம் குறைந்து
கிளையின் இலைகளில்
சொட்டிக்கொண்டிருந்தது.

சற்று தூரத்தில்
குயில் கூவியது
அது தன் இணையை
அழைக்கும் குரலாகக்கூட
இருக்கலாம்.

இரவு பூச்சிகள்
சற்று முன்னதாகவே
மொய்க்கத் தொடங்கிவிட்டது.

மழை நீரில்
அடித்துப் போனது போக..
தப்பிப்பிழைத்த எறும்புகள்
வரிசையாய் ஊர்ந்து வந்தது.

எதிரில் தென்படும்
விரோதியை பார்த்து
முகம் சுழித்து விலகிப்போகும்
மனிதர்களைப் போல..
மேககங்கள் விலகிப்போனது.

சாளரத்தின் வழியே
உள் நுழைந்த
சில்லென்ற காற்று..
புத்தகத்தின் பக்கங்களை
புரட்டிக்கொண்டிருந்தது.

அக்கணத்தின்
கவிதையொன்றை எழுதிட
வந்து விழும்
வார்த்தைகளுக்காக..
சலனமின்றி காத்திருக்கிறேன்
நான்..

க.போ.சுருளியாண்டவர்



இமைக்காது விழி பார்த்து
பொய்யாய் கூறும் அத்தனையும்
உண்மையாய் விழிமூடி ரசிக்க
அவனிடம் மட்டுமே முடிகிறது!!

வலிந்து தோற்பதும்
வலிமையாய் வெல்ல முடிவதும் அவனிடமே!!

பொய்யாய் அடித்து
பொய்யாய் கடித்து
பொய்யாய் சிணுங்கி
உண்மைக்குழந்தையாய்
கைகால் உதறி அழுவதும்
அவனிடம் மட்டுமே !!

முத்தமோ, யுத்தமோ
ஒன்றுக்கு பத்தாக வாங்குவதும்
பத்துக்கு நூறாக திருப்பித் தருவதும்
அவனிடம் மட்டுமே!!

சிறுமூச்சில் கரைவதும்
பெருமூச்சில் மீள்வதும்
அவனிடம் மட்டுமே...

தேடித்தேடித் தொலைவதும்
தொலைவதிலேயே மீள்வதும்
அவனுடன் மட்டுமே!!

பார்த்ததும்
வயிற்றில் சுரக்கும் அமிலமும்
காதுமடல் பற்றி எரிவதும்.......
அது அணைவதும் அவனாலே!

நினைவுகளைக் கிளறும்போது
கண்மூடி ரசிக்க ....
தனியாய் புன்னகைக்க.....
யாரும் பாராமல் வெட்கப்பட...
முணுக்கென்று கண்ணீர் சிந்த...

ஒரு முறையேனும் காதலித்து “விடு”ங்கள்......!!!!

லாஸ்யா



கீழிருந்து
கூடு பார்த்து
அம்பெய்த வேடனை
விரட்டி அடித்து....

மேலிருந்து
நோட்டமிட்டபடியே
வட்டமிடும்
வல்லுரை வதம்
செய்து....

எந்த
சேதாரமுமில்லாமல்
குஞ்சுகளை
தன் சிறகுக்குள்
பொத்தி அணைத்த
பிறகும் அடங்கவில்லை
தாய்ப் பறவையின்
விழியில் தீப்பிழம்பு....

அது சரி....

பாரதியின்
ரௌத்திரம் பழகு
காக்கை குருவிக்கும்தானே.....

அமுதா தமிழ்நாடன்



உன்னோடு ஒரு நாள் கிடைத்தால்...

என் வீடு முழுக்க உன் வாசனையை
சேமித்துக்கொள்ள அத்தனை அறைகளையும் சுற்றி
காட்டுவேன்

சுவற்றில் தொங்கும் எனது இரண்டாம் வகுப்பு குழு
புகைப்படத்தில் என்னை அடையாளம் காட்டிய உன்
விரலை பற்களுக்கு இடையே கவ்விக் கொள்வேன்

தேநீர் தயாரித்து தரச் சொல்லி மிடறு மிடறாய்
சுவைப்பேன்.
கொஞ்சமாய் உன்னையும்

என் வீட்டுப் பூனையை நீ வருடும் வேளையில்
உன் மடியில் என் பாதங்களையும் சேர்த்து
நுழைத்துக்கொள்வேன்

உதட்டுச் சாயத்தை உன் விரல்களில் தடவி போட்டு
விடச் சொல்லுவேன்

என் அலமாரிப் புத்தகங்களில் உன்னை நினைத்து
அடிக்கோடிட்ட வரிகளை எல்லாம் வாசித்து
காண்பிப்பேன் உன் மூச்சுக்காற்று என் கழுத்தை
வருடும் அருகாமையில்

நமக்கு பிடித்த பாடல்களையெல்லாம் ஹெட்போனை
இருவர் காதிலும் ஒவ்வொன்றாய் இணைத்து இசை
கேட்பேன்

கல்லறையில் தூங்கும் அப்பாவிற்கு உன்னை
அறிமுகப்படுத்துவேன்
உன் கரங்களை பற்றிக் கொண்டு

எனது ஊரில் நான் கடந்த இனிமையான
மனிதர்களையும் இடங்களையும் பரிச்சையப்படுத்த
கூட்டிச்செல்வேன்

வலியையும் மகிழ்வையும் கொட்டித் தீர்ப்பேன் உன்
சட்டை அணியாத மார்பில் என் விழி ஈரம் வழிந்து ஓட

உனக்கு பிடித்ததுவும் நான் எப்பொழுதும் வாங்கி
தர நினைத்துகொண்டிருந்த ஒரு பரிசொன்றை
பரிசளிப்பேன்

விடைபெறும் தருணத்தில் உன்னோடு சுயமி ஒன்றை
எடுத்துக் கொள்வேன்
நீ சிரிடி சிரிடி என்று சொல்லும் பொழுது
அழுகை அடக்கி பொய்யாக சிரித்தவாறே

ச. ப்ரியா



நான் முறைக்கிறேன்
மகள் சிரிக்கிறாள்...
தோற்றுப் போய்
வெட்கப்பட்டு அழுகிறது
கோபம்..!

▣ தமிழ்குமரன்

எல்லா விழாக்களிலும்
அவள் ஏன் இப்படி சிரித்தபடியே
இருக்கிறாள்
என்று கேட்கிறார்கள்

அவள் சிரித்து சிரித்துதான்
அதை விழாவாகவே ஆக்குகிறாள்
என்பது
எத்தனை பேருக்கு தெரியும்?

▣ மழைக்குருவி

பசிக்கிறது என்று
சொல்லத் தெரியாத
நடைபாதையில் படுத்திருக்கும் குழந்தை
நிலாச்சோறு வேண்டும் என்றது

தண்ணி குடிச்சுக்கோ
காலையில சாப்பிடலாம்
என்று அம்மா சொன்னதை கேட்டு
தலை ஆட்டிவிட்டு
கண்கள் மூடியக் குழந்தையை
பார்த்துக் கொண்டே இருந்தது
நிலா.

▣ தமிழ்ச்செல்வன்



காலம் ஒரு யட்சியைப் போல் விகசித்து நிற்கிறது

எல்லா சரிகளையும் தவறாக்கி
எல்லா தவறுகளையும் சரியாக்கி

பேய்ச்சிரிப்பு சிரிக்குமதற்கு

வேறெதுவும் தெரியாது

மனிதர்கள் பொம்மைகள்
என்பதைத் தவிர

உருட்டி உருட்டி விளையாடுகின்றது
பகடைக்காய்கள் என

வெட்டுப்படுவதும் வீழ்வதுமாய் மலையேறுவதும்
தப்பித்தலுமாய்
குதியாட்டம் போடும் பொம்மைகள்
அறியுமோ

ஆடும் கரங்களை...

▣ **மகிழினி காயத்ரி**

ஓவியம் வரைந்த காகிதத்தை எடுத்து
குழந்தையின் மலத்தை துடைத்தெறிந்த
அத் தாயை சற்று முகச்சுழிப்புடன்
உற்று நோக்கிய
என்னைப் பார்த்து
அந்த குழந்தை சிரித்தது
மௌனமாய் வரையத் தொடங்கினேன்
கடவுளை மிஞ்சிய உயிரோவியமொன்றை,,

▣ **சுயம்பு**



தங்கச்சரடை
பட்டுத்துகிலை
புறந்தள்ளி சுடர்விடும்
சிறு நெற்றிச்சுட்டி

நீள் ஆராதனைகள்
தேவையற்று
ஒரு பட்டுகுட்டியில்
புஜ்ஜூ குட்டியில்
மொட்டவிழும்
சிற்றரும்பு

சிறு மல்லிச்சரத்தில்
கிறங்கிச்சரியும்
பெருந்திரு

ஒளி உதிர்த்து
இருள் சூடும்
பொன்னந்தி

ஒரு குவளை
தேநீரில்
நுரைத்து ததும்பும்
நேசக்கடல்

சிறு நெல்மணிகளில்
கூண்டடையும்
பெரு வனக்கிளி

காதல் ...

சிறுமழை துளிகளின்
தீண்டலில் செழிக்கிற
பெரு மழைக்காடு

**செ.வீரமணி**



கிரீடங்களை சுமந்து அலையும்
மனங்கள் புன்னகையின்
வண்ணம் அறிவதில்லை...

பிறர் புன்னகைக்கு மெனக்கெடும்  மனிதர்களின்
தலையில் ஒருவராவது
சூட்டி விடுவர் கிரீடத்தை!!

உங்கள் இதயத்தை புன்னகைக்க வைக்கும் எவரும்
உங்கள் ஆன்மாவின்
தலையில் கிரீடம்
சூட்டி அழகு பார்க்கும்
மனது கொண்டவர்!!

இதயம் திறந்து
விழி விரித்து பாராட்டி
மகுடம் சூட மனமில்லா விட்டாலும் ஒற்றைப் புன்னகை
எனும் சாமரம் வீசிச் செல்லலாம்!!

இதயம் மலர்ந்த
புன்னகை முகத்தின் மகுடம்!!

-

**ஜோதி சரண்**

சன்னலை மூடும் குழந்தை
கொஞ்சம் கொஞ்சமாக மறைகிறது
பெருங்கடல் ...

**ஐ.தர்மசிங்**

# தேநீர்



தேயிலைத்தோட்டத்து
தொழிலாளர்களின்,
தினக்கூலி உயர்த்தப்பட்டதால்
அவர்களின் தேநீர் சுவை,
இரட்டிப்பாகிவிடுகிறது.

- ஆ.சார்லஸ்

மறைத்து மறைத்து,
அப்படி என்ன
வாழ்ந்து விடப் போகிறாய்?,

ஊர் பார்த்துவிடக் கூடுமுன்
குறியைக் கூடவும்!,

அடுக்கிய விறகிடுக்கிலோ!
தூவிய மண்ணிடுக்கிலோ!...

- துளசி வேந்தன்



வரவேற்க ஆளுயர பொம்மைகள்!
பன்னீர் பீச்சியடிக்க இயந்திரம்!
மெஹந்திபோட, சேலை உடுத்த அழகுபடுத்த என
அனைவருக்குமான ஏற்பாடுகள்!
ஆங்காங்கே
நாற்பது இஞ்ச் டீவியில் நேரடி ஒளிபரப்பு!
கண்ணைபறிக்கும் வண்ண விளக்குகள்!
நின்று அமர்ந்து சாப்பிட நாற்பது வகை உணவுகள்!
ஆட்டம் பாட்டம் என அற்புத கட்சேரிகள்!
இன்னபிற விடுபட்ட அத்துணை
பிரம்மாண்டங்களையும் ஆறுமாதமேனும்
அசைபோடலாம்! இத்துணைக்கும் நடுவே எத்துணை
முயன்றும் நினைவிற்கு தட்டுப்படுவேயில்லை அது
யார்வீட்டு திருமணமென!

நா.கி.பிரசாத்

வருகையில்
ஆனந்தம் கொண்டு
தொடரும்
இதம்
சலிப்பாகி
சில நாட்களில்
போதுமென
நினைக்க வைத்து
சென்ற பின் மீண்டும்
வருகைக்காக
ஏங்க வைக்கும்
அந்த மழைக்கு
தேவன் உன் பெயரிட்டேன்.

சரண்யாசத்தியநாராயணன்

# விளக்கினுள் பிரகாசம்



.

உறங்கும் மக்கள்
மழையைக் கொண்டாடும்
தவளைகள்.

.

நீரோடும் ஆற்றில்
சிறு சப்தத்தோடு உதிரும்
பழுத்தயிலை.

.

களத்தோரத்தில்
பயனின்றி துளிர்விடும்
தானிய விதை.

.

தொடர் மழைக்குப் பின்
புல் நுனியில்
தூய்மையான நீர்த்துளி.

.

குறையும் எண்ணெய்
எரியும் விளக்கினுள்
குவியும் பிரகாசம்.

.

இருவேளையும் சூரியனை
தனக்குப் பின்னால்
விட்டுச்செல்லும் பறவைகள்.

கவி. விஜய்



இந்த இரவை
எப்படிக் கடத்துவது....
கண்மூடி விழித்தால்
காணாமல் போகும்
இந்த இரவை எப்படிக் கடத்துவது.....

நெடுஞ்சாலையில்
ஒன்றன் பின் ஒன்றை துரத்தி விளையாடும்
வாகனங்களுக்கு....

இந்த இரவு
வசதி படுத்திக் கொடுத்திருக்கிறது
பல்லிளித்து காட்ட....

நடை சாத்திய சந்தோசத்தில்
கோயில் புறாக்கள்...

ஆலய மணிக்குத்தான்
அரிதாரம் பூசாமல் இரவெல்லாம்
ஊமை வேசம்....

நடுச்சாமத்தில்
வாயடைத்து நிற்கும்
கதவுகளுக்கும்...
கண்மூடி உறங்கும் உங்களுக்கும்...

காடு கடந்து வந்த
ஒரு நத்தையின் இரவு
எவ்வளவு நீளமானது
என்பதறிய வாய்ப்பில்லைதானே...

மஹா பர்வீன்



காட்டுவழி பயணத்தின் போது
கிடைத்த சில மயிற்பீலிகளை
சேகரித்து வந்து என்
தெரு குழந்தைகளிடம் தந்தேன்.

மகிழ்ச்சியில் தங்களை
மயில்களாய் பாவித்து
இறகுகளை
தோகை போல் விரித்து
ஆடிப்பாடிக் கொண்டிருந்தனர்.

தோகை விரித்தாடினால்
மேகம் கூடி மழை பொழியுமென
மயில்கள் அறிந்த ரகசியம்
மழலைகள் அறிந்திருக்கவில்லை.

எப்போதும் மழை கண்டால்
கைநீட்டி ஆர்ப்பரிக்கும்
அவர்கள் முகத்தில் அன்று
மழை கண்ட மலர்ச்சி இல்லை ...
மயிலிறகு நனைகிறதே என்ற
கவலை இருந்தது...!!

**கலிபூ**

பங்கு பிரிக்கிறது மின்கம்பி
பாதி நிலவு எனக்கு
பாதி நிலவு மகனுக்கு

**மகேஷ் சிபி**



அவர்களின் செயல்களை நினைத்து
புழுங்காதிருங்கள்
ஊமையாய் கடந்து செல்லுங்கள்
வலிமிகுந்த துரோகத்தின் கசப்புகளை கடந்தபின்
உங்கள் கோபத்தை
மௌனத்தால்
பின்னிவையுங்கள்.
ஒரு நாள் அது அவர்களை
அவமானப்பட வைக்கலாம்
அல்லது
வேறிடத்தில் யாருக்கும்
நிகழாமலிருக்கலாம்.
உங்கள் ஜீரண மண்டலம்
எந்த துயரத்தையும் செரித்துக்கொள்ளும்
வலுவானவை என்பதை அறிந்தே
அவர்கள் துயரத்தின்
கனிகளை பறித்து
உங்கள் பந்தியில் வைத்தார்கள்.
மாற்றங்களேதுமின்றி
அவர்கள்
தொடர்ந்துகொண்டிருந்தால்
பிரிதொரு சந்தர்ப்பத்தில்
உங்கள் மௌனத்தின் ஆழத்திலிருந்து
வேறொரு மௌனத்தை எடுத்து
அவர்களிடம் பேசிவிடுங்கள்.
அம்மௌனம்
பிளந்த அணுவின் சப்தங்களால்
நிரம்பியிருக்கட்டும்...

சந்துரு ஆர்சி



எல்லோரும் இந்த
பூமியைக் கைவிட்ட நிலையில்
அவனால் மட்டுமே
கொண்டுவர
முடிந்தது

பாதாளச் சாக்கடையில்
மண்டியிட்டுக் கிடக்கும்
பலரின் காரிருளை

வாய் கிழியப் பேசும்
ஜாம்பவான்கள்
அவனிடத்தில்
தோற்றுப்போய்விடுகிறார்கள்

கழிவுகள்
சாபம்நீக்கியக்
கடவுளாய்
பார்க்கின்றன

சிலரின் பார்வைக்குப்
பரிசுத்த
மலராய்
தென்படுகிறான்

இன்னும் பலருக்கும்
பலவிதமான
உருவமாய்

எதனையும்
பொருட்டுப்படுத்தாது
பீடியைப் பற்ற
வைக்கையில்
இந்த
வையம்
அவன்
காலடியைத்தொட்டு
வணங்குகிறது

செ.புனிதஜோதி

# அடுக்களையும் அவள்களும்



எப்போது நினைத்துக் கொண்டாலும்
அநேகமாக
அடுக்களை சார்ந்தே
நினைவுக்கு வருகிறாள்
அம்மா.

இது அம்மா செய்து
சாப்பிட்டது..
இது அம்மா செய்தால்
அப்படி மணக்கும் என்று ...

நாவோடு தங்கிய
அம்மாவின் ருசியோடு தான்
அலைமோதித் திரும்பும்
ஆணின் பசி.

உன் அம்மா கையால் சாப்பிட்ட
உருண்டைக் குழம்பு..
இன்னும் என் நாவிலேயே நிற்கிறது
என்பாள் தோழி.

செண்பகப் பாட்டியின் முறுகல்தோசை மிளகாய்ச் சட்னி..
ஜெயா சித்தியின் கைமுறுக்கு..
பாக்கியம் அத்தையின் ஏழுகறி ஆனம் என்று..
கைமணத்தின் வழியே தான்
அடையாளமாவார்கள்...
எம் சமத்துக்காரிகள்.

ஆட்சிமொழி கற்றிருந்தாலும்
திருமணத்துக்குள்
சமைக்கக் கற்றுக் கொள்
என்று தான்
அறிவுறுத்தப்படுகிறாள்
அக்கா.

மெல்லிய குரலில் பாடலும்
அழகழகாய் ரங்கோலியுமாக
சாளரத்துச் சிட்டுக்குருவியோடு கவிதை பேசுகிற
அம்மாவின் அடுக்களை தாண்டிய
திறனெல்லாம்...

உப்புக் காரம் யோசிப்பவளுக்கு
உபரிச் சிந்தனை எதற்கென்ற
நக்கலாவதையும்..
சிரித்துக் கடக்கவே பழக்கியிருக்கிறோம்
அவளை.

கொத்தமல்லி கோசு மீறி
வீட்டில் செல்லுபடி ஆனதேயில்லை அவளின்
சிந்தனைகள்.

அத்தனை ஏன்...

உனக்கு என்ன வேண்டும்
என்று கேட்டால்..
தனக்கென்று யோசிக்கத் தெரியாது
வீட்டுக்கென்று எதையேனும் கேட்டு வைப்பாள்.
வீட்டுக் காரியங்களில்
அப்பாவின் அலட்சியங்கள்
எப்போதும் அலுவல் நிமித்தமாவதும்
அம்மாவின் அலுவல்கள்
எப்போதும் அலட்சியமாவதுமே
வீடென்பதன் விதி.

அடுக்களைகள் எப்போதும்
அம்மாவின் ராஜ்ஜியம் தான்
என்னும் மெச்சுதலெல்லாம்..

அவளுக்கு வரமா சாபமா..
யார் கேட்டது அவளை.

கேட்டுவைக்கப் போய்
அதுவே
அவளைத் தட்டியெழுப்பி விட்டால்..

அன்பு மணிவேல்



சமைக்கும் அம்மா
பசியோடு காத்துக் கொண்டிருக்கும்
நாய் குட்டி

சாதி பாகுபாடில்லை
அனைவருக்கும் ஒரே தட்டில்தான்
தூலாபாரம்

சமைத்து முடிந்ததும்
முதலில் எடுத்துக் கொடுக்கிறாள்
நாய்க்குட்டிக்கு

கரு.கிருஷ்ணமூர்த்தி

இந்த பிரிவின் துயரை மனம் அத்தனை சுலபமாய் ஏற்றுக்கொள்ளவில்லை.மனம் தனக்குள்ளாய் அழுதும் தன்னையே சமாதானம் செய்தும் துயருறும் மனதின் வேதனைகளின் வலிகள் இன்னும் குறையவில்லை. வலியை குறைக்க வழி தெரியாமல் பிரிவின் துயரங்களை எழுத வார்த்தைகளை தேடி நெடும்பயணம் செல்லவேண்டுமாயிருக்கிறது. நீண்டகாலம் நம் வாழ்வில் எல்லாமுமாயிருந்து விலகிச்சென்ற ஒருவரின் வெற்றிடத்தை எவரைக்கொண்டும் நிரப்ப இயலாது. அதையும் மீறி இன்னொருவரை கொண்டு நிரப்புவதென்பது சுயநலத்திற்கான பெருங்குறியீடே.அதில் தவறொன்றுமில்லை. துணையாயிருக்க எவரொருவராவது துணைகொண்டுயிருப்பது நலமே தரும்.

செந்தில்



மிதிபட்ட நத்தையின் பிசுபிசுப்பு
உன் பார்வை.

மௌனக் குத்தூசி தைக்கிறது
சொற்களின் இடைவெளியை.

சிறு கல்லின் மீது வீசியெறிந்த குளத்தால்
சுற்றிலும் ஈரம்.

நீர் கோர்த்த கனவின் மீது
சுமையை இறக்கி வைக்கிறது
வெங்காயச் சருகு தலையணை.

வடையும் நுங்கும்
ஒரே விலைக்கோட்டில் நுகரப்படும் தெருவில்
மல்லாக்கப் படுத்திருக்கிறது
நம் இரவின் வெயில்.

சூடேறிய வட்டக்கல் இரவு
ஒரு குவளை நீர் தெளித்து
தோசையாகச் சுருட்டித் தூக்கத்தைப் பரிமாற
முன்பதிவு செய்கிறேன் கடவுளிடம்.

ஒட்டிய கனவுப்பிசினைச் சுரண்டி
உருண்டையாக்கித் தருகிறாய்.

உருண்டு உருண்டு
கதவுக்குப் பின்னால் ஒளியும்
இரவு சட்டையென்றால்
கனவு பொத்தான்.

விளக்கை அணைத்ததும்
ஒளியைப் புணரும் இரவு
உன் காமம்.

விடிந்துவிட்டது
வா, வந்து சோம்பல் முறி.
வெறும் வயிற்றில்
மிச்சமிருக்கும் இரவின் கசாயத்தையும் அருந்து.

மா. காளிதாஸ்



ஒவ்வொரு முறை
மிதிக்கிற போதும்
முன்னே செல்கிற
மிதிவண்டி போல்
எத்தனை முறை
மனதை மறக்க
மிதித்தாலும்
பின்னோக்கி செல்கிறது
உன் நினைவுகள் தேடி..

ச.ஆனந்தகுமார்

காகிதப் பூக்களில்
குவியக் குவிய
ஓர் மென்னிசை கேட்கையில்
வெற்றுத் தாளின்
பூசாத ஓவியமாக
மணம் பரப்பும் நோக்கில்
கணத்திற்கு
கனம் அதிகரிக்க
வெயில் விசிறிய
கானல் நீரில் பானமாக
பாணம் நிறைத்து
அம்பாகி கண் இலக்கின்
கோட்டில் வாழ்வை
அர்த்தம் பொதிந்த
வான்முழுவதும் நீரிறைக்கும்
முகிலின் மழைப் பார்வையில்
நெஞ்சம் நனைகிறது

பூங்கோதை கனகராஜன்

# பிடி நழுவிய பந்தம்



நூலிழையில் தொங்கிக் கொண்டிருந்தது
தெருமுக்கு கண்ணீர் அஞ்சலி போஸ்டர்
தங்கவேல் M.
தோற்றம் மறைவோடு.

எப்படி என்றேன்
மார்பு வலிக்கிறது பிடி என்றார்
பிடிப்பதற்குள் முடிந்துவிட்டது
சரியாய் ஐந்து நிமிசம் என்றார்கள்..

ஐந்து நிமிசத்தில்
அறுத்துக்கொண்டு போவதெல்லாம் தான்
ஆயுசுக்கும் அழவைத்துக்கொண்டே இருக்கிறது..

இல்லாமல் போனதை
எழுதுவதென்பது
கவிதையில் சேர்வதில்லை கவலையில் சேர்கிறது..

**கலைச்செல்வி**

முளைக்கும் துளிரிடம்
பிளக்கும் மலைக்கு
முதிர் கருணையின்
சாயல்

**சுஜாதா கண்ணன்**

# உன்னைப் பிரதிபலிக்கும் கண்ணாடி நான்



விழிப்பின் நெடுகிலும் உடன் வரும் நீ
உறங்கும் நேரத்தில்
எனக்கான சிரிப்பைத் தராமல்
ஏனோ அழுகையைப் பரிசளிக்கிறாய்

அது உனது பிறவிக்குணமாகவும் இருக்கலாம்
அல்லது
எனக்குப் பிடிக்குமென
எண்ணியிருக்கக்கூடும் அன்றி
உன்னைப் புன்னகைக்கச் செய்திருக்கும்

இடையிடையே அக்கறையில் வந்து தழுவும்
ஓரிரு சொல்லாடல்கள் தாலாட்டு பாட
அனைத்து கொள்கிறேன்

தோள் சாய்ந்து கண்ணுறங்கும்
கனவுகளில் மாத்திரம்
ஒருபோதும் அழவைப்பதில்லை என்பதாலேயே
விடியலில் சிரிக்கிறேன்

உன் விழிப்பின் நெடுகிலும்
நான் உடன் வர கவிதைகளாகின்றன
சிரிப்புகள்.

▫ பிரியா பாஸ்கரன்

படித்ததில்
மதிப்பெண்களுக்காக
எழுதியது போக...

மீதமானவற்றையெல்லாம்
என்ன செய்வதென்று
கேட்கிறாள் மகள்...!!

▫ வணவை தூரிகா



ஒரு கவிதை செய்ய
நீங்கள்...........
என்னவெல்லாம்
மெனக்கிடுவீர்

கொஞ்சம் உடல் வருத்த
கொஞ்சம் உயிர் வருத்த
மண்டையைத்தட்டி
மயிரை சொரிந்து

தேநீர் கோப்பையோடு
ஒரு சிகெரட்டை புகைத்தபடி
வீதியை வெறித்து
விவரங்களை குவிக்க.......

வேண்டாம் இப்படியெல்லாம்
உங்களுக்கு பிடித்தமான......
ஆழ்மனதில் பதிந்துபோன........
பெயர்த்தெடுக்க முடியாத.............
ஒரு பெயரெழுதி
அதன் பக்கத்தில்
ஒன்றிரண்டு..........
புள்ளிகளை இட்டுப்பாருங்கள்
இன்னும் போதவில்லை என்றால்
பெயருக்கு கீழான
முழுபக்கத்தையும்
வெற்றிடமாய் விட்டுவிட்டு

யாவிலும் நீதானென
முடியுங்கள் போதும்.

கா. வெங்கடேஸ்வரன்

# மணிமேகலை டீச்சர்



நான்காம்வகுப்பில் நாள்தவறாமல்
பள்ளிக்குப்போவேன்.
அம்மாவைப்போலவே எனக்கு
மணிமேகலை டீச்சரையும் ரொம்ப பிடிக்கும்..
பெரியவிழிகளை உருட்டிஉருட்டி
நிறைய கதையும் பாட்டும் சொல்வார்.
அம்மா சமைக்காத நாட்களில்
டீச்சரின் டிபன்பாக்ஸ்
பருப்புஉருண்டைதான் பசியாற்றும்.
ஆங்கிலப்பாடல் போட்டிகளில்
வாங்கிய பரிசையும் கோப்பைகளையும்
பார்க்கும்போதெல்லாம்
மனசுக்குள் டீச்சரின் முகம் மலரும்.
சமீபத்திலொருநாள்
பேருந்துப் பயணத்தில் கண்ணில்பட்டது
கன்னக்குழிவிழும் சிரிப்புடன் டீச்சரின்
கண்ணீர் அஞ்சலிபோஸ்டர்.
மெதுவாய் நகரும் பேருந்துக்குள்
வேகமாய் பரவியது பருப்பு உருண்டை வாசம்.

காசாவயல்கண்ணன்

# பூனையின் ரயில் பயணம்



அந்த ரயிலேறியது
யாருக்கும் தெரியாமல் பூனை

பிடித்தோரென
ப்ரியத்தோரென
பெரும் பயணிக்கூட்டம்
புன்னகைத்தும்
உரையாடியும்
இறங்கியும் ஏறியும்

தொடர்ந்தது பூனையின் ரயில் பயணம்

நெஞ்சில் கனமில்லைதான்
நினைவிலும் துயரில்லைதான்

ஆனால்
இறங்கியபோதுதான் தெரிந்தது
அது வனாந்தரமென

புன்னகையுடன் பூனை
விட்டுச் சென்ற
ரயிலையேப் பார்த்தபடி
அது மறைந்தபின்னரும்கூட

பொல்லாத பூனை
சொல்லாதுதானே?
தன் உள்ளுக்குள் ஓடுவதென்னவென

ரா.ராஜசேகர்

# சபித்த வரம்



மிச்சம் இருக்கும்
துளி பச்சையமும்
உனக்கானதே
எடுத்துக்கொண்டு
சருகாக்கி விடு.

வற்றிய பிறகும்
என்ன ஜீவநதி
வரண்ட
இவன் வெளியில்.?

துளி நதியும்
காயும் முன்பே
துடைத்து எடுத்துவிடு
நதிக்கான சாபமதை.

சிறகுகளை
வெட்டிவிட்டு
பறவை என்பதென்ன
பெயர் அபத்தம்..?
ஊர்வன இவனுக்கு.

உன்
வெற்றிடங்களை நிரப்பாத
இவனுக்குள் தான்
உன்னை அறியாமல்
பூரணமாகி இருக்கிறாய்.!

அன்றொரு நாளில்
அறியாமல்
உதிர்த்த வார்த்தைகள்
பிரிதொரு நாளில்
சபிக்கப்பட்ட வரமாகட்டும்
காதல் என்று.

சுரேஷ்பாபு ராசேந்திரன்



கூவியழைத்து கவனம் திருப்பி
கண்களில் வாங்கி
இதயம் வைப்பதற்குள்
பறந்துவிடும் பறவையின்
வெற்றிடமாய் ஏமாற்றும்
உனது சொல்லாத அன்பை
நீயே சுமந்து பற...
யார் வந்தமர்ந்தாலும்
மேலும் அழகாகி விடும்
வெற்றிடம் போதுமெனக்கு

கோ.லீலா

வழிநெடுக சரக்கொன்றை
மீண்டும் பூக்கதொடங்கியது
எனக்குள் இரசனை.

மேம்பால திறப்பு விழா
பூங்கொத்து நீட்டும்
சரக்கொன்றை மரம்.

க. அய்யப்பன்



நீரள்ளி நீ தெளித்த வாசல்தான்
ஊறித் ததும்பி
மழைகட்டி வானமலைகிறது

இரவு முழுக்க
மேய்த்த நிலவை
பட்டியிலடைத்து விட்டு
நீ அவிழ்த்த கிழக்கே
விடியலை பூத்திருக்கிறது

வெயிலாடி ஓய்ந்த
உன் இளைப்பாறலை
பொன்னந்தி என்ற பொழுதிற்கு
வெள்ளிக்காசுகள் வழங்க
தன்னை சில்லரைத்த சூரியனுக்கு
உன்னை ஒத்த வண்ணம்

சிப்பிக்குள் கர்ப்பமானதெல்லாம்
நதியாடி நீ சிதற்றிய
நீர்க்கருணை

கோ. பாரதிமோகன்

குளக்கரையை சுற்றி
அமைக்கப்பட்டது
வேலி....
ஆனாலும்
குறைந்துகொண்டே
இருக்கிறது தண்ணீர்...

மணிசங்கர்




குட்டி குட்டி கதை சொன்னாள்..
வளர்கையில் தலையில்
குட்டிக் குட்டியும்  கதை சொன்னாள்..
திருமணத்திற்கு பின் அநேக நேரம்
குத்திக்காட்டியும் சொன்னாள்..
மருமகளின் பல தவறுகளை
கூட்டிக்கூட்டியும் கதை சொன்னாள்..
முதுமையில்
கத்திக் கத்தி கதை சொன்னாள்
கிடையில் ..
எதையோ காட்டிக் காட்டி கதை சொன்னாள்...
இறுதியில் ஒருநாள்
கதையாகிப் போனாள்...

சிந்தா

எங்கு செல்வதென
தெரியாமல் தவிக்கிறது
சாலையின் நடுவில் கானல்நதி.!

த. ரவீந்திரன்



சமூக சேவை அறக்கட்டளைகளால் அடிக்கடி
அர்ப்பணிக்கப்படும்
மின்தகன மேடைகள்,
விரிவுபடுத்தப் பட்டு,பாதுகாத்து கோட்டைச் சுவர்
எழுப்ப படும்
கல்லறை தோட்டங்கள்,
அடிக்கடி கண்களில் படும்
இறப்பு சான்றிதழ் பெறுவதற்கான காண அலுவலக
விளம்பரங்கள்,
நகரின் மையப்பகுதியில்
அலங்கரிக்கப்பட்ட தயார் நிலையில்
வைக்கப்பட்டிருக்கும்
சொர்க்க ரத வாகனங்கள்
பூக்கடையின் சாரத்தில் தொங்கும்
இணைக்கப்படாத பூ மாலைகள்
வீசும் வாசனைகள்,
வருடம் முழுவதும் திறந்தேயிருக்கும் பட்டாசுக்
கடைகள்,
செய்தித்தாளில் செய்தியை மிஞ்சிய கண்ணீர்
அஞ்சலி விளம்பரங்கள்,
திடீரென யாரோ ஒருவரால் வைக்கப்படும் புலன
ஸ்டேட்டஸ்கள்
என
ஏதோ
கொஞ்சம் குறைக்க தான் செய்கிறது,
மரணத்தைப் பற்றிய பயத்தை

இரா. மதிராஜ்

# கருவாட்டுக்குள்ள செறுவாட்டுக்காசு...



அப்பாவுக்குத் தெரியாம
நெல்லுவித்த காசை
கருவாட்டு பானைக்குல
ஒளிச்சு வச்சிருந்து
பள்ளிக்கூடத்துக்கு போகும்போதெல்லாம் ஏதாவது
வாங்கித்திண்ணுனு
அம்மா கொடுத்த காசுல
கருவாட்டு நாற்றத்தைவிட
கூடுதலாய் மணத்துக்கிடக்கும்
அவளின் பாசம்!

நேசன் மகதி

இரை தேடிப்போன
தாய்ப்பறவை இன்னும்
கூடு திரும்பவில்லை...
எல்லாத் திசைகளிலும்
பதட்டத்தோடு திரும்பிப்பார்த்துக்கொண்டிருக்கிறது...
குஞ்சுகளை சுமக்கும் மரம்!

மு.முபாரக்

# இப்படிக்கு வேதாளம்



திருமணமான புதிதில்
வாடிப்போய் மஞ்சள் நிறத்திலிருக்கும்
மல்லிகையை வாங்கி வந்தாய்
பூ விற்கும் பாட்டி கெஞ்சி கேட்டதால்
வேறு வழியின்றி
வாங்கியதாக மெய்யுரைத்தாய்......

குழந்தை பிறந்து தாய் வீட்டிலிருந்த
என்னை பார்க்க வந்தபோது
இரண்டாவது முறையாக
மல்லிகை வாங்கி வந்தாய்
குழந்தைக்கு ஆகாதென சொல்லி
சூடிக்கொள்ள அனுமதிக்கவில்லை
என் அம்மா.....

இத்தனை வருடங்களுக்குப் பிறகு
ஏதும் கேட்காமலே
அதே மல்லிகையை
விக்ரமாதித்தனாக மீண்டும்
வாங்கி வந்திருக்கிறாய்
இம்முறை எந்த ஆராய்ச்சியும் செய்யாமல்
முதன்முதலாய் கூந்தலேறும்
மல்லிகை பூக்களில் குவிந்து கிடக்கிறது
வானமளவு காதல்.....

பிரபுசங்கர் க

# இந்த பறத்தல்



வட்டமடிப்பதில்
வாத்தியம் இருக்கிறது
கிட்ட வருவதில்
சிறகு தேர்ந்த வித்தை
வண்ணம் மாற்றும் யுக்தி
வெள்ளைக்கு உண்டு
நாள் கணக்கற்ற நோய்
இந்த பறத்தல்
நட்சத்திரம் கொத்த
குறைவெனில் நிலா பறிக்க
நினைப்பிருக்கலாம்
நிம்மதி
கூடு விடுவதிலா
கூடு அடைவதிலா
தூர கேள்விகளை
தோகை விரிக்க அனுமதிக்கிறது
பார்த்துக் கொண்டே இருக்கிறேன்
அதுவும் பார்த்து விட்டால்
பிறகு நான் தான்
பறவை....!

கவிஜி

# மொழி வனைதல்



தட்டெழுத்துப் பயிற்சிக்கூடத்தில்
யந்திரங்கள்
மொழியைக் கடித்துத் துப்ப

பயிலவந்த பெண்ணொருத்தி
காற்றில் சொற்களை
நளினமாய் வனைந்து காட்டுகிறாள்
அவளது தோழிக்கு

இருவரும் மாறி மாறி
வனைகையில்
அடிக்கடி சிரித்துக்கொள்கிறார்கள்

அப்பொழுதுதெல்லாம்
ஒரு சிற்றாறு கரை தளும்பும்
ஈரத்தின் சுவடை சுவாசிக்க நேர்கிறது

வாசனையற்ற பூவொன்று
கவனம் ஈர்த்த கணமது

▫ யாழினி

நாம் வலியில் துடிப்பது
நாமே உணராத போது
காயம் ஆற்றிவிடவும்
கூட வரவும் தாமாகவே வந்து
கண்ணீர் துடைத்து
இறுக அணைத்து
காலம் எல்லாம் இருப்பதாய்
சத்தியம் உரைப்பவர்கள் தான்
மறுபடி
நினைத்துப்பார்க்கவோ
மீண்டோ வர முடியாத
தீரா வலி ஒன்றில்
வீழ்த்தி துடிக்க வைத்துப்போகிறார்கள்

▫ குபோதினி

# நிராகரிப்பின் வலி...



நிராகரிப்பை விட
நிராகரிப்பதற்காய் சொல்லப்படும்
வலிமையற்ற காரணங்களே
மிகுந்த வலியைத் தருகிறது...
வலிகளினூடே வாழ்க்கை
பழகிவிட்ட ஒன்றுதான் என்றாலும்
ஒவ்வொரு முறையும்
நிராகரிப்பின் வலி மட்டும்
நீண்டுகொண்டேயிருக்கிறது...

பொதுவில் இயல்பாய் இருப்பதாய்
நடித்தாலும்
தனிமையைத் தேடிப்பிடித்து
இருகரங்கள் கொண்டு
வாயை இறுக்கி மூடி
அழுகையின் மூலம் கூட
வலியை வெளியேற்றி விடாமல்
மீண்டும் உள்ளுக்குள்ளேயே
திணித்திடும் ரணம்
மீண்டும் ஒருமுறை வேண்டவே வேண்டாம்....

அன்பைக் கொடுத்து
அழுகையை பரிசாகப் பெறுவதில்
என்ன இருந்துவிடப் போகிறது
மீளமுடியா துயரம் ஒன்றைத் தவிர....
அதீத அன்பு எப்போதுமே
அனாதையாக்கப்படுகிறது....

சசிகலா திருமால்

# வாழ்வியல்



அந்த சருகானது
தண்டிலிருந்து சறுகியதும்
வாழ்ந்த இடத்தை
அண்ணாந்து பார்க்கையில்
அதன் கண்களுக்கு
அனைத்தும் சருகுகளாகத் தெரிகின்றன
மேலிருக்கின்ற பச்சையிலைகள்
கீழ் நோக்கிப் பார்க்கையில்
அவற்றின் கண்களுக்கு
கிடக்கின்ற சருகுகள்
பச்சையெனத் தெரியுமாயின்
அர்த்தங்கள் அபரிமிதமற்று
அந்நியோன்யமாகி
வாழ்வியல் அழகுறவே விளங்கப்பெறும்...

சுப்பையா கந்தையா

வேறுபாடின்றி
பாதங்களை தன்னுள்
பதியவிடும் மணலுக்கு
தாய்மையின் சாயலென....

பாதை பூஜை செய்கின்றன
கடல் அலைகள்....

ஜனனி


RN BALAJI PRODUCTION
FILMING IN PROGRESS...
PADAIPPU PRODUCTION
AISHWARYA DUTTA - SENDRAYAN
PRODUCTION NO:01
DIRECTED BY CHARLES RAYAPPAN
DOP - MARUTHA NAYAGAM BOSE - MUSIC - DEV PRAKASH
EDITING -TAMILARASAN - CHOREOGRAPHER - ABU&CHALAS - PRO - NIKIL MURUGAN
CO PRODUCERS - MOHAMED ALI JINNA.M - SASIKUMAR NITHYANANTHAM
PRODUCED BY-BALAJI NEDUNCHEZHIYAN